SUNSHINE SOAP

இது ஓர் லாலா தயாரிப்பு
சலவையின் சோப்
எந்தக்கடைகளிலும் வாங்கலாம்

லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
# The EELA NADU

மலர் மார்கழி 4 முஹறம் 7 இதழ் 309
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19 12 77

லாலா சோப்
ஸ்தாபனத்தாரின் அன்பான
வேண்டுகோள்
மாணவ மாணவிகளே!
கூடுதலான விலைகொடுத்து உங்கள் அப்பியாசக் கொப்பிகளை வாங்கவேண்டாம். 25 லாலா நீல சோப் மேலுறைகளை அனுப்பி இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
லாலாசோப்தொழிற்சாலை
அச்சுவேலி.

# அமைச்சருக்கு வரவேற்பு; பகிஷ்கரிப்புக்கு எதிர்ப்பு

## வரவேற்பில் தமிழ் எம்.பிக்கள் இல்லை

### இன்று காப்புறுதிக்கிளை கட்டடதிறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

**வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுக்காலை பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கியபோது அவருக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது. இந்த வரவேற்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. இதன் பின் யாழ். கச்சேரியில் நடைபெற்ற மகாநாட்டில் கூட்டணி எம். பிக்கள் கலந்து கொண்டனர்.**

அமைச்சர் அத்துலத் முதலி, பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த பாதைகள் சிலவற்றில் அலங்கார வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

நேற்றுப் பிற்பகல் முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி வேலணையில் சந்தைப்படுத்தும் திணைக்களக் கிளையொன்றைத் திறந்து வைப்பதற்கு அமைச்சர் சென்றிருந்தார். இந்த வைபவத்தில் பச்சைக்கொடிகளும் சிகரமும் கட்டப்பட்டிருந்த காரணத்தால் தாம் பங்குபற்ற முடியாது என்று தீவுப் பகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் கடைசி நேரத்தில் மறுத்துவிட்டதால் அந்தக்கிளையை அமைச்சர் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன உரைநிகழ்த்த மறுத்துவிட்டுத் தமது நயினைதீவு யாத்திரையைத் தொடர்ந்தார்.

## யோகேஸ் திறந்து வைப்பது உறுதி

இந்த வரவேற்பு நிகழ்ச்சிகள் திறப்புவிழா வைபவங்கள் ஒருபுறமிருக்க இன்று முற்பகல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவிதியில் புதிதாகநிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக்கிளை அலுவலகத்தைத் திறந்துவைப்பதற்கு முன்னரே ஒப்புக்கொண்ட யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனை இதில்கலந்துகொள்ளக் கூடாதென்று சிலர் வற்புறுத்தியது மட்டுமல்லாமல் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம். மறியல் என்று பயமுறுத்தியவர்களுக்கு ''தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப்பீடத்தின் சொற்படியே நடப்பேன்; அதைமீறிச் செயல்படுவதானால் நான் எனது பதவியையே துறப்பேன்'' என்று திரு யோகேஸ்வரன் உறுதியாகத் தெரிவித்தார்.

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாணத் தொகுதிப்பிரதிநிதியாகப் பேரவைக்குத்தெரிவு செய்யப்பட்ட என்னைத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத்தான் எது செய்யவேண்டும்; எதுசெய்யக் கூடாதென்று பணிப்பதற்கு அதிகாரம்உள்ளதேதவிர வேறு யாராலும் எனக்கு உத்தரவிட முடியாது'' என்று திரு யோகேஸ்வரன் தம்மிடம்வந்து திறப்புவிழாவில் கலந்துகொள்ளக் கூடாதென்று கேட்டவர்களிடம் சொன்னார்.

''எனது தொகுதியில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் புதிய கிளை அலுவலகக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது அதைத் திறந்து வைப்பதற்கு என்னைவிட வேறு யாருக்குத் தகுதியிருக்கிறது?' என்றும் திரு யோகேஸ்வரன் அவர்களிடம் கேட்டார்.

### பகிஷ்கரிப்பும் வாபஸும்

இதே சமயம் இந்தவைபவங்களில் கலந்து கொள்ள வேண்டாமென்றும் இவற்றைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் கோரித் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் கடைசி நேரத்தில் மனம்மாறித் தமது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளத் தீர்மானித்துவேறு துண்டுப் பிரசுரமொன்றை வெளியிடுவதற்கு ஆயத்தங்கள் செய்த போதிலும் வேலணையில் பண்டிதர் திறப்பு விழா

6-ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மகன் விடுதலை!

நிக்கோஸியா, டிச 18

கடத்தப்பட்ட சைப்பிரஸ் ஜனாதிபதியின் மகன் இன்று விடுதலை செய்யப்பட்டு ஜனாதிபதி மாளிகை திரும்பினார்.

கடத்தல் காரர்களுக்கும் சைப்பிரஸ் ஜனாதிபதிக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்தே ஜனாதிபதியின் மகன் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று மாலை இழுக்கப்பட்ட 643-வது இலக்க தேசியலொத்தர் சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
47 N 0468
ரூ. 1,00,000.00

2-வது பரிசு:
13 J 0976
ரூ 40,000,00

3-வது பரிசு:
33 F 0813
ரூ 10,000.00

## கூட்டணி அலுவலகம் மீது குண்டுவீச்சு!

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயம் நேற்று அதிகாலை 1-30 மணியளவில் இனந்தெரியாத நபர்களின் கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகியது.

இதனால் காரியாலயத்தின் வாசற்சுவர் முற்றாக இடிந்துள்ளது. அத்துடன் காரியாலய ஓடுகள்சிலவும் விழுந்து நொருங்கியுள்ளது. இக்கைக்குண்டு வெடித்ததின் சத்தம் சுமார் ஒன்றரை மைல் தூரத்துக்கு எதிரொலித்ததாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றிகூட்டணிதலைமைக் காரியாலயத்தைச்சேர்ந்த திரு. தேவன் தெரிவிக்கையில்; ஞாயிறு அதிகாலை 1 30 மணியளவில் கேட்ட அதிர்ச்சிச் சத்தத்தால், தான் கண்விழித்ததாகவும், உடனே வெளியே சென்று பார்த்தபோது குண்டின் தாக்கத்தால் காரியாலய முன்பக்க யன்னல்கள் யாவும் திறந்திருந்ததாகவும், முன்புறச்சுவர் இடிந்திருந்ததாகவும் ஓடுகள் விழுந்து நொருங்கியிருந்ததாகவும், இது பற்றி உடனே தாம் பொலிசாருக்கும், கோப்பாய்பா உ.க்கும் தொலைபேசிமூலம் அறிவித்ததாகவும் கூறினார். [இ]

## ''பொறுத்திருந்து பார்ப்போம்'' — அமிர்

(யாழ்ப்பாணம்)

'நாட்டை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காணப்போவதாக பிரதமர் நாட்டுக்கும், மக்களுக்கும், வாக்குறுதியளித்துள்ளார். இந்த வாக்குறுதியின் பெறுபேற்றை அறிய சந்தர்ப்பம் கொடுத்து பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.' யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் நேற்று நடந்த மாவட்ட விவசாய கமிட்டிக் கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்ட

[6ம் பக்கம் பார்க்க]

## இந்திரா ராஜினாமா

புதுடில்லி, டிச 18

திருமதி இந்திரா காந்தி, காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்!

இத்தகவலை காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு பிரமானந்தரெட்டி இன்று வெளியிட்டார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்து திருமதி இந்திரா காந்தி ராஜினாமா செய்த கடிதத்தை, திருமதி காந்தியின் ஆதரவாளர் ஒருவர் காங்கிரஸ் தலைவரிடம் சமர்ப்பித்ததாக இன்று இரவு அறிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக காங்கிரஸில் ஏற்பட்டுவந்த பிளவு, திருமதி இந்திராகாந்தியின் ராஜினாமா மூலம் உச்சத்துக்குச் சென்றுவிட்டதாக அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

வெங்காயம், மிளகாய் நல்ல காரம்!
அவற்றின் விளைச்சலோ அபாரம்!!
அவற்றை மேய வரும் பூச்சிகளோ சம்ஹாரம்!!!
இதுவே

அம்புஷ் 25

இருமிநாசினி தரும் உபகாரம்!!!!
ஒரு ஏக்கருக்கோ 2 அவுன்ஸ் அம்புஷ் 25 போதுமானதே
விலையோ ரூ. 35-00 மட்டுமே

மேலதிக விபரங்கட்கு:
விவசாய ஆலோசகர்:
த ரோரு லிமிட்டெட்,
32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7651

## “1948க்குப் பின்

# கைத்தொழில்களை எந்த அரசும் தமிழ்ப்பகுதிகளில் உருவாக்கவில்லை”

### — வட்டு. எம். பி.

[சுழிபுரம்]

‘கல்வியும் பொருளாதார முன்னேற்றமும் கிழக்குமாகாணங்களைப் பொறுத்தவரை முக்கிய இடம் பெறுகின்றது. இவை இரண்டையும் அபிவிருத்தி செய்வது தான் எனது முதல் நோக்கம். இவற்றை அபிவிருத்தி செய்தால் நாம் சுதந்திரமாக வாழ முடியும். 1948-ம் ஆண்டிற்குப்பின் எமது பிரதேசங்களில் புதிய கைத்தொழில்கள் உருவாகுவதற்கு எந்த அரசாங்கமும் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. இக்காலகட்டத்தில் ஆயிரக்கணக்கான கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டும் வட கிழக்கு மாகாணங்களுக்கு 5 சத வீதமேனும் அனுமதிக்கப்படவில்லை’

வட்டுக்கோட்டை தேசியப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய அடிக்கல்நாட்டு விழாவில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் சைவப் புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை வடமாநில வித்தியாதிபதி திரு தி. மாணிக்கவாசகர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

‘82 வருடங்கள் பழமை வாய்ந்த இவ்வித்தியாலயத்தின் புதிய கட்டட அத்திபாரக்கல் நாட்டுவிழாவில் பங்குபற்றுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். குறுகியகால அறிவித்தல்தான் கிடைத்தது. எனினும் எனது கடமையில் தவற நான் விரும்பவில்லை.’

‘கல்வித்திட்டம் சிறப்புற நடைபெற வேண்டுமெனமுல் அரசாங்கம், பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் ஆகிய நாலு பகுதிகளும் நாலு தூண்களாக நின்று தாங்கிச் செயற்படவேண்டும். பன் முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் தேவைகளை நிறைவேற்றுபவர்கள் எதிர்க்கட்சித் தலைவரும் அந்தந்தத் தொகுதி பேரவை உறுப்பினர்களுமே. அவர்களுடைய ஒத்துழைப்புடன் கல்வித்தரத்தை உயர்த்தலாம்.’

திரு. இ. ஆனந்தராசா, சட்டத்தரணி நா. ஏகாம்பரம், திரு. த. சிதம்பரநாதன், திரு கி. சிதம்பரநாதன் ஆகியோரும் பேசினர். (க)

## இலவசம்

பயன்தரும் மரக்கன்றுகள் இலவசமாகப்பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் பில்க்வைற் தொழிலகத்தில் அதிபர் திரு கனகராசாவிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பலா, எலுமிச்சை, மாதுளங்கன்றுகளும், இலுப்பை, மலைவேம்பு, மருந்து போன்ற குளிர்தரும் மரக்கன்றுகளும இலவசமாகக் கிடைக்கும்.

# ‘உயிர்கள் அனைத்தும் இறைவனின் சொந்தமே’

### யாழ்ப்பாணத்தில் தமிழகப் பேராசிரியர் சுந்தரமூர்த்தி

[யாழ்ப்பாணம்]

‘ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்கு வரும்போது இறைவன் திருவருள் ஒன்றுதான் துணையாக வர முடியும். வாழ்முதலாகிய பொருள் இறைவன் ஒருவனே; உலகில் வாழும் உயிர்கள் எல்லாம் அவன் சொந்தமே’



இவ்வாறு அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ் துணைப்பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி நேற்று பலாலிவிமானநிலையத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

காரைநகர் மணிவாசகர் சபையின் 23வது மணிவாசகர் விழாவை ஆரம்பித்துவைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தும் பொருட்டு பேராசிரியர் சுந்தரமூர்த்தி யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

பேராசிரியர் மேலும் பேசுகையில், ‘அனுபவித்தற்குரிய பொருள்கள் எல்லாம் இறைவனின் உடைமையாகும். இவ்வுணர்வோடு வாழ்வதே வாழ்வின் நோக்கமாகும்’ என்றார்.

விமானநிலையத்தில் மணிவாசகர் சபைஉறுப்பினர்கள், ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள் தமிழ் வளர்ச்சிக்கழக உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் பேராசிரியரை வரவேற்றனர்.

மணிவாசகர்விழா காரைநகர் ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானத்தில் இம்மாதம் 21-ம் திகதி தொடக்கம் தொடர்ந்து ஐந்து தினங்கள் நடைபெறும். (உ)

## இந்த ஆசிரியர்கள் நிலை

(அரியாலை)

முன்னைய அரசால் பொறுப்பேற்கப்பட்ட தோட்டபாடசாலைகளில் பணியாற்றும் 17 ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லையாம்

அத்துடன் நியமனக் கடிதங்களும் அவர்களுக்கு வழங்கப் படவில்லையாம்

இவர்களுக்கு அரசால் விதிக்கப்பட்ட இரண்டு வருட சேவையும், வேண்டிய கல்வித் தகைமைகளும் இருந்தும் இவர்கள் பாரபட்சமாக நடத்தப் படுகின்றனர் எனவும் இது விடயத்தில் தலையிட்டு ஆவன செய்யும்படி எதிர்க் கட்சித் தலைவர் உட்பட ஏனைய எம். பிக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## கண்டுபிடிப்பு

கீவா, டிச. 18

மத்திய ஆசியாவின் புகழ் மிக்க கவிஞரும், ‘ருபாய்’ என்ற நாலடிக் கவிதை மரபினைத் தொடக்கிவைத்த பெருங் கவிஞர்களில் ஒருவருமான பஹலவான் மஹ்முத்தினல் 13 ம, 14 ம் நூற்றுண்டு காலத்தில் எழுதப்பட்டவை எனக் கருதப்படும் அரிய நாலடி கவிதைகளின் தொகுப்பு ஒன்றினை உஸ்பெக் அறிஞரும் எழுத்தாளருமான தொஹ்தாஸின் ஜலாலோவ் கண்டுபிடித்துள்ளார். (உ

## 2கப்பல்கள் எரிகின்றன

லண்டன், டிச. 18

தென் ஆபிரிக்காவுக்கு அருகில் இந்து சமுத்திரத்தில் இரண்டு எண்ணைக்கப்பல்கள் மோதி தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அவ்விடத்தில் ஒரே புகை மண்டலம் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

## யாருடையது?

யாழ்ப்பாணம்சிவன்கோவில் வடக்கு வீதியில் செல்வன் சிவாகரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையொன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளவும்.


## வரிவிளம்பரம்

### தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும் வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

வவுனியாவில் தோட்டவேலை செய்ய ஆட்கள் தேவை நல்ல அனுபவமும் ஊக்கமும் உள்ளவர்களுக்கு நாட்சம்பளம் ரூபாய் 10 முதல் 15 வரை வழங்கப்படும். குடும்பங்கள் விரும்பத்தக்கது. 192, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 7948

### விற்பனைக்கு

புதிய இசைத்தட்டுகள் சிறந்த கிறிஸ்மஸ் றீஸ் கைவசம் விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும்: பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ், 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7934


## ‘பதி’ செய்தவைபற்றி ஆராயவேண்டும்’

### — தேவநாயகம்

[கொழும்பு]

முன்னாள் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் பதவியிலிருந்தபோது மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி ஆராய கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்று நீதி அமைச்சரும் கல்குடா எம். பீயுமான திரு. தேவநாயகம் பேரவையில் கோரிக்கை விடுத்தார். [ம-இ]

## ‘சண்’ சொற்பொழிவு

(அரியாலை)

இம்மாத இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி (பீக்கிங்) த்தலைவர் திரு. சண்முகதாசன் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டங்களில் அரசினால் அமுல்நடத்தப்படவிருக்கும் வரவு-செலவு திட்டத்தை எதிர்த்துச் சொற்பொழிவுகள் நடாத்தவிருக்கிறார். (உ)

## ஆராதனை

(அரியாலை)

நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலயத்தில் இம்மாதம் 24-ம் திகதி மாலை சங்கீர்த்தன ஆராதனை விசேட கிறிஸ்மஸ்பாடல்களுடன் நடைபெறும். கிறிஸ்மஸ் ஆராதனை ஞாயிற்றுக் கிழமை காலை ஆலயத்தில் ஆரம்பமாகும். (உ)

## தொலைபேசி சீர்குலையாம்

[சங்கானை]

சங்கானை தபால் நிலையத்தில் தொலைபேசித் தொடர்பு சீராக இயங்காததால் அவசரச் செய்தி அனுப்பமுடியாது பொதுமக்கள் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். [உ]

# ஆசிரியர் பற்றுக்குறை விரைவில் தீர்க்கப்படும்

### பிரதி அமைச்சர் உறுதி

[கொழும்பு]

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் தற்போது 7399 ஆசிரியர்கள் பற்றுக்குறை உளளது.

அரசின் நிதிநிலைமை நெருக்கடி காரணமாக இப்போது மேலும் ஆசிரியர்களை நியமிக்க முடியவில்லை விரைவில் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். இவ்வாறு பிரதிக் கல்வி அமைச்சர் திரு லயனல் ஜயதிலகா தேசிய அரசுப்பேரவையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

1976ம் ஆண்டில் 3672 சிங்கள ஆசிரியர்களும், 1127 தமிழ் ஆசிரியர்களும் 1352 முஸ்லிம ஆசிரியர்களும் நியமனம் பெற்றனர்.

70-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கியமுன்னணி அரசு 70க்கு முன்னர் ஐக்கியதேசியக் கட்சியினல் நியமிக்கப்பட்ட பல ஆசிரியர்களை அரசியல் காரணங்களுக்காகவேலை நீக்கம் செய்தது. அவர்களை மீண்டும் வேலையில் சேர்ப்பது இப்போது கல்விஅமைச்சு ஆலோசித்து வருகிறது.

இதேவேளையில் கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் நியமனம்பெற்ற ஆசிரியர்களை உடன்வேலைநீக்கம்செய்யுமாறு பலர் எம்மைக் கேட்டுள்ளபோதிலும் நாம் அப்படிச் செய்யவில்லை.

மாணவர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பதற்கு முன் ஆசிரியர்கள் ஒழுக்கத்துடன் இருக்கவேண்டும் குளியப்பிட்டியில் உள்ள பாடசாலைக்கு முன் இருக்கும மதுபானச்சாலையில் மது அருந்திவிட்டு பாடசாலைக்கு சென்று படிப்பிக்கும் ஆசிரியர்களையும் எனக்குத் தெரியும். [ம-இ]

# ‘பீலிக்ஸின் வீட்டுக்குபாம்பு வடிவத்தில்மின்சாதனங்கள்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி மகாநுவ பூங்காவிற்கு செல்லும் தனியார் வீதி ஒன்றில் முன்னாள் அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினதும், முன்னைய அரசாங்க முக்கியஸ்தர்களினதும் வீடுகள் இருந்த காரணத்தினால் அவ்வீதி கொழும்பு மாநகரசபைப் பணத்தில் திருத்தப்பட்டு நவீன மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வாறு யாப்பகுவ உறுப்பினர் திரு எச் பி அபேரத்ன கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு பிரேமதாஸ பேரவையில் கூறினர்

இது முன்னாள் மேயர் பௌசியின காலத்திலேயெநடைபெற்றது அமைச்சரின் வீட்டுக்கு நவீன வசதிகளை ஏற்படுத்த மின்சாதனங்கள் நாகபாம்பு வடிவத்தில் வழங்கப்பட்டன என்றும அவர் கூறின [ம]

# “மாணவர் திறமை தக்கவிதத்தில் வெளிக்கொணரப்பட வேண்டும்”

(யாழ்ப்பாணம்)

“நாகரிகம், பண்பாடு என்பன யாவும் கவின்கலைகளின் வாயிலாகவே ஏற்பட்டன. இதனுல் முற்காலத்தில் அரசரும், செல்வரும் மற்றோரும் கலைகளைப் புகழ்ந்து கலைஞர்களைப் பாராட்டினர். இதனல் உலக அரங்கில் தமிழர்களுடைய ஓவியக்கலையும், ஆடற்கலையும்சிறப்புபெற்றன”என்று யாழ். லயன்ஸ் கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட சித்திரக் கண்காட்சியை யாழ். றிம்மர் விடுதிச்சாலையில் ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. ஜே ஏ. பிரான்சிஸ் கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

“கவின் கலைகள் வனதன்னலமும், பழிபாவங்களும் நிறைந்த உலகை விட்டு தம்மை அப்பால் அழைத்துச் செல்ல வல்லன. இது உண்மையிலேயே ஓவியக் கலையைப் பொறுத்தவரையில் மிகமிகப் பொருத்தமானதாகும்.

பெரியோர் சிறியோர் என்ற பாகுபாடு இல்லாமல் ஓவியக் கலையில் ஈடுபடுபவர் அக்கலையின்பால் ஈர்க்கப்பட்டு அக்கலை உலகிற்கே கொண்டுசெல்லப் படுகின்றார்.

“லயன்ஸ் கழகம் இன்று சமூகசேவைகளுக்கு அப்பாலும் சென்று இளைய சமுதாயங்களின் அறிவாற்றலை சிந்தனை வளத்தை அவர்களுடைய கற்பனை உணர்வை, வெளிக் கொணரும்முயற்சியில் வெற்றி கண்டுள்ளது. இம்முயற்சியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பாடசாலைப் பிள்ளைகளுக்கு இப்படியான போட்டிகளை நாம் நடத்துவதனுல் அவர்களுடைய திறமையைக் காணக்கூடியதாயுள்ளது எதிர் காலத்தில் இப்படியான பணிகளில், சமூகசேவையாற்றும் பல இயக்கங்களும் ஈடுபட முன்வரவேண்டும்” என்ருர்.

யாழ் லயன்ஸ் கழக தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் பேசுகையில் “நாம் குறுகிய காலத்தில் இப்படியான போட்டியை வைத்தும் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஆர்வத்துடன் பங்குபற்றியமை பாராட்டப்படவேண்டியது” என்ருர்.

விழாவில் பல லயன்ஸ் கழக பிரமுகர்களும் உரையாற்றினர். (செ)


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## அறிவித்தல்

எம்மால் ஒழுங்குசெய்யப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் 28-1-78 திகதி பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேம்.

பொருளாளர்

இலங்கை வங்கி ஊழியர் சங்கம்

யாழ் மாவட்டம்

7952

மத்திய கிழக்கு விவகாரம்:

# சமாதானம் சாத்தியம் என்ற நம்பிக்கை வலுவடைகிறது

## எகிப்திய அதிபர் சொல்கிறார்

கெய்ரோ, டிச. 18

மத்திய கிழக்குப் பிரச்னையில் சுமுகத் தீர்வு ஏற்படுவது சாத்தியமே என்ற தமது நம்பிக்கை மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எகிப்திய அதிபர் அன்வர் சதாத் கெய்ரோவில் செய்தி நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

இதேவேளை இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் அமெரிக்க ஜனாதிபதி திரு ஜிம்மி கார்ட்டருடன் மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பாக மேலும் ஆலோசனைகள் நடத்துவார் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை திரு கார்ட்டரும் திரு. பெகினும் சந்தித்து இரு மணித்தியாலங்கள் வரை பேச்சுவார்த்தை நடத்தினர். எனினும் பேச்சுவார்த்தை விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இஸ்ரேலிய, எகிப்திய அதிகாரிகள் இஸ்மாலியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவர் என செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [உ]

# யூகோ. அதிபர் ஸ்பெயின் செல்வார்

பெல்கிரேட், டிச 18

யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ விரைவில் ஸ்பெயினுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். பெல்கிரேட்டிற்கு விஜயம் செய்த ஸ்பானியக் கம்யூனிஸ்ட் தலைவரிடம் மார்ஷல் டிட்டோ இத்தகவலை வெளியிட்டார்.

அடுத்த வசந்த காலத்தில் அவரது விஜயம் மேற்கொள்ளப்படும் என பெல்கிரேட் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [உ]

# 'நிர்ப்பந்தத்துக்கு பாரதம் அடிபணியாது'

## — அமைச்சர் வாஜ்பாய்

புதுடில்லி, டிச. 18

"பாரதம் எந்த நிர்ப்பந்தத்திற்கும் அடிபணியாது" என்று பாரத வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாயி பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

இது இவ்வாறு இருக்க, தெற்காசியா அணு ஆயுத சூன்யப் பிரதேசமாக இருக்கவேண்டும் என்று ஐ. நா சபையில் பாகிஸ்தான் கொண்டுவந்த பிரேரணைக்கு பாரதம் ஆதரவளிக்காததற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

முன்னரும் இதுதொடர்பாக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கும் பாரதம் ஆதரவளிக்காதது குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டது. [உ]

காங்கிரஸில் உள்பூசல வலுக்கிறது

# கட்சி பிளவுபடும் சூழ்நிலை

## என இந்திரா ஆதரவாளர் எச்சரிக்கை

புதுடில்லி, டிச 18

காங்கிரஸ் கட்சிக்குள் கோஷ்டிப் பூசல்கள் விஸ்வரூப மெடுத்துவருகின்றன.

ஒருவார காலத்துக்குள் காரியக்கமிட்டி கூட்டப்படவேண்டும் என்று திருமதி காந்தியின் ஆதரவாளர்கள் தலைமைப் பீடத்தை வலியுறுத்தியுள்ளனர்

காரியக்கமிட்டி விரைவில் கூட்டப்படாத பட்சத்தில் கட்சி பிளவுபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் திருமதி காந்தியின் ஆதரவாளர்கள் மிரட்டியுள்ளனர்.

கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் விவகாரம் இன்னமும் தீர்க்கப்படாத நிலையிலேயே இருந்து வருகிறது. இவ்விவகாரம் தொடர்பாகவே காரியக்கமிட்டி கூட்டப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுவருகிறது. [உ]

### மாஜிநீதியரசர்மீது வழக்கு!

சென்னை, டிச. 18

சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஒருவர் தமது வருமானத்திற்கு அதிகமாக ஆறு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா சம்பாதித்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திரு வீராசாமி என்ற முன்னாள் நீதியரசர்மீதே இந்திய மத்திய புலனாய்வுத்துறையினர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கு விசாரணை இம்மாதம் 20 ம் திகதி நடைபெறவிருக்கிறது. (உ)

### "லஞ்ச ஊழல் ஒழிக்கப்படும்"

புதுடில்லி, டிச. 18

"லஞ்ச ஊழல்கள் முற்றாக ஒழிக்கப்படும்" என்று பாரத மத்திய அமைச்சர் திரு. சரண்சிங் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

### போர்த்துக்கலில் அரசியல் நெருக்கடி நிலை

லண்டன், டிச. 18

போர்த்துக்கலில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை தீர்த்து வைக்கும் பொருட்டு போர்த்துக்கல் ஜனாதிபதி திரு. ஈனஸ் அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

போர்த்துக்கல் பிரதமரின் அமைச்சரவை கடந்தவாரம் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது பதவியிழந்ததனையடுத்து இந்த நெருக்கடிநிலை உருவாகியுள்ளது. [உ]


- யாழ்ப்பாணத்தில் -

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளை அலுவலகத்தின்

## புதிய கட்டிடத் திறப்புவிழா

★

திகதி: 1977 டிசெம்பர் 19 (இன்று)

நேரம்: காலை 10-00 மணி

இடம்: 571, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★

தேசிய அரச பேரவையின் யாழ்ப்பாணத்தொகுதி உறுப்பினர்

திரு. வெ. யோகேஸ்வரன் அவர்களால்

திறந்துவைக்கப்படும்.

மாண்புமிகு வர்த்தக அமைச்சர்

திரு. லலித் அத்துலத் முதலி அவர்கள்

பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

★

இவ்விழாவில் கலந்து சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவரும்

பணிப்பாளர்சபை உறுப்பினர்களும்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

267, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. 7957


### எழுச்சிக் கொண்டாட்டம்

மாஸ்கோ, டிச. 18

ஆட்சி அதிகாரத்தைத் தொழிலாளர், விவசாயிகளினது அமைப்புகளுக்கு கையளிக்கக் கோரியும், தனியார் உடைமைகளை நேசவுடைமையாக்கக் கோரியும், நிலத்தை விவசாயிகளுக்குச் சொந்தமாக்கக் கோரியும் குவாங்செள (கன்டன்)வில் "கன்டன் கம்யூன்" பாட்டாளி மக்கள் வரலாற்றுப் புகழ்மிக்க ஆயுத எழுச்சியினை நடாத்தியதன் 50 வது ஆண்டுவிழா மாஸ்கோ நட்புறவு இல்லத்தில் கொண்டாடப்பட்டது.

'கன்டன் கம்யூன்' போராட்டத்தில் வீரமரணம் எய்திய சீனப் பாட்டாளிகளை நினைவுகூரும் இவ்விழாக் கூட்டத்தில் மாஸ்கோவிலுள்ள சீனத் தூதுவராலய அதிகாரிகளும், சோவியத்-சீன நட்புறவுச்சங்க உறுப்பினர்களும், நூற்றுக்கணக்கான மாஸ்கோ வாசிகளும் கலந்துகொண்டனர்.

### சோமாலியாவுக்கு சீன ஆயுதங்கள்

நைரோபி, டிச. 18

"கடந்த இரண்டு மூன்று வார காலமாக சவூதி அரேபியா மார்க்கமாக ஈரானிய ஆயுத. தளபாடங்கள் பெருமளவில் சோமாலியாவுக்கு வந்து குவிந்தவண்ணமுள்ளன. மூன்று பாகிஸ்தானிய பயணி விமானங்களும் சீனாவிலிருந்து ஆயுதங்களையும், இராணுவ வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களையும் கொண்டுவந்து வந்து இறக்கியுள்ளன' என 'நைரோபி டைம்ஸ்' எழுதியுள்ளது.

### பிரிட்டன் பொருளாதார நிலை

லண்டன் டிச. 18

பிரிட்டனின் பொருளாதார நிலை மோசமாகியுள்ளதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

### பொலிஸ் இடமாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தலைமைக் காரியாலயப் பொலிஸ் இன்ஸ்பெக்டராக ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மத்துகம தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். எஸ் நவரத்தினராஜா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

களத்தாவ இரட்டைக் கொலை வழக்குமூலம் பிரபல்யம் பெற்றவர் திரு. நவரத்தினராஜா.

#### சுன்னாகம் இன்ஸ்பெக்டர் மன்னாருக்கு

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனாப் இ ஏ. ஏ. காதர் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மன்னார் தலைமைக் காரியாலயப் பொலிஸ் இன்ஸ்பெக்டராகப் பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். (உ)


## சுசி

∴ கலண்டர்கள்
∴ டயறிகள்
∴ பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

V

வடபகுதி விநியோகஸ்தர்கள்

S. P. சாமி அன் கொம்பனி

193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

# ஆயுட் காப்புறுதி ஆரம்பித்த வரலாறு

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்திற்கென யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இரண்டு மாடிக் கட்டிடத்தை தேசிய அரசுப் பேரவையின் யாழ் தொகுதி உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரன் இன்று கோலாகலமாகத் திறந்துவைப்பதை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது. இந்த வைபவத்தில் வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவிருக்கிறார்.**

மக்கள் ஏன் ஆயுட் காப்புறுதிப் பத்திரத்தை வாங்குகிறார்கள் என்பதற்கு விசேட பதில் ஒன்றுமில்லை. தேவையைப் பூர்த்திசெய்யவே மக்கள் எதையும் வாங்குகிறார்கள். விற்பனைக்கு அடிப்படை தேவைகளே. உடனடியாக இருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்யவோ, அண்மையிலோ சிறிது காலம் கழிந்தோ அல்லது நீண்ட காலம் கழிந்தோ ஏற்படும் தேவைகளைப் பூர்த்திசெய்யவோ ஒரு பொருளையோ, சேவையையோ நாம் வாங்குகிறோம். இந்தத் தேவைகள் வெளிக்குத் தெரியும்படியாகவும் இருக்கலாம் அல்லது தெரியாதனவாகவும் இருக்கலாம்

ஆரம்ப காலத்தில் மனிதன் பலருடன் கூடிவாழ்ந்து எதிர்ப்புகளைக் கூடி எதிர்த்துத் தனக்குப் பாதுகாப்பைத் தேடிக்கொண்டான். அவனுடைய இருப்பிடமும் வாழ்க்கைமுறைகளும் வளர்ந்தபோது, கூட்டுக் குடும்ப முறையை ஏற்படுத்திக்கொண்டு வாழ்க்கையின் ஆபத்துக்களை எதிர்த்துப் போராடினான். காலப்போக்கில் இயந்திர சகாப்தம் தோன்றியவுடன் கூட்டுக் குடும்ப முறை சிதைவுற்றது. கணவன், மனைவி, குழந்தைகள் கொண்ட குடும்பம் தனக்குத்தானே திட்டமிட்டுக்கொண்டு பாதுகாப்புத் தேடிக்கொண்டது. குடும்பத்திற்குப் பாதுகாப்பு வருமானம் ஈட்டுவோரின் பொறுப்பிலிருந்தது. கணவன் வருமானம் தேடித்தருவதால் அவனே குடும்பப் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்றான். சில குடும்பங்களில் கணவனும், மனைவியும் சேர்ந்து வருமானம் ஈட்டினால் இருவரும் குடும்பப் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்றார்கள்.

தன்னுடைய குடும்பத்திற்கு வருமானம் ஈட்டுவோர் உணவு, உடை, வசிப்பிடம் வாழப்போதிய பாதுகாப்பு ஆகிய தேவைகளைப் பூர்த்திசெய்யுமளவிற்கு வருமானம் தேடும் நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பட்டான் இத்தேவைகளைப் பூர்த்திசெய்ய இடையறாமல் உழைத்தான். தன்னுடைய பொறுப்புக்களை சரிவர உணர்ந்தவுடன் ஓர் உண்மை அவனுக்குப் புலப்பட்டது. சில சம்பவங்கள் ஏற்பட்டால், தனக்குக் கிடைக்கும் அன்றாட வருமானம் இல்லது ஊதியவருமானம் குறையக் கூடும் அல்லது தடைபடக் கூடும் அல்லது மொத்தமாகவே நின்றுவிடும் என்று அவன் தெரிந்துகொண்டான்.

## எதிர்காலத் தேவைகள்

என்ன அந்த சம்பவங்கள்? தனக்கு விபத்தோ, நோயோ ஏற்பட்டால் தற்காலிகமாவது சம்பாதிக்க இயலாமற் போகலாம் என்பதை உணர்ந்தான், வயது முதிர்ச்சியடைந்தாலோ அல்லது அசம்பாவிதமாக அகால மரணம்ஏற்பட்டாலோ வருமானம் மொத்தமாகவே நின்றுவிடும். எனவே தேவைகளைப் புரிந்துகொண்ட அவன் கிடைக்கும் வருமானம் இரு வெவ்வேறான செயல்களைப் புரியவேண்டுமெனத் தீர்மானித்தான். (1) வருமானம் வாழ்க்கையின் தற்போதையத் தேவைகளைப் பூர்த்திசெய்வது. (2) வருமானத்தின் ஒரு பகுதியை சில அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டால் தனக்கும் தன்னைச் சார்ந்துள்ளோர்க்கும் உதவும் வகையில் ஒதுக்குவது. அதன்படியே தன்னுடைய வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத்தில் எழக்கூடிய தேவைகளுக்கென ஒதுக்கிவைத்துவிட்டான். இத்திட்டத்தின்படி சில குடும்பங்களில் எதிர்காலத் தேவைகளைவிட அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை வளர்ந்து பெருக ஆரம்பித்தது. அந்தக் குடும்பங்களில் வருமானமீட்டுபவரின் நோக்கமே மாறிவிட்டது தேவைக்கு மீறிய சேமிப்புத் தொகையை முதலீடு செய்து அதன் மூலம் வருவாயைத் தேடிக்கொண்டார்கள். இதனால் இரண்டு வெவ்வேறான முறைகளில் வருமானம் ஈட்டுவது என்ற நிலைமை ஏற்பட்டது. (1) மனிதன் தங்கச்செய்து வருமானம் ஈட்டுவது-அதாவது வேலை செய்யும் நேரத்தை முதலீட்டாகக் கொள்ளுதல் (2) பணம், வேலை செய்து வருமானம் ஈட்டுவது. பணத்தை முதலீட்டாகக் கொள்ளுதல்.

தவணைத் தவணையாகச் சேர்க்கும் சேமிப்பு முறை சிறந்தது. சிறுகச் சிறுகச் சேமிப்பது வருமானம் ஈட்டுவோரின் வருமானத்துள் சாத்தியமாகும். மேலும் சேமிப்பை பரவலாகப் பல ஆண்டுகளுக்கும் வைத்துக்கொள்ளலாம், இரண்டாவது நிலைமையில், கடன் வாங்கி நிலைமையைச் சமாளிப்பதென்றால் திருப்பிக் கொடுக்கும் கடன்வசதிகளைப் பரவலாக பல ஆண்டுகளுக்கு வைத்துக்கொள்ள முடியாது.

வே. அ. திருஞானசுந்தரம்
[பிரசாரப்பகுதி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்]

இந்த இரண்டு நிலைமைகளிலும், பாதுகாப்புத் தேடுவது என்பது ஒன்றே. ஆனால் தேவையும் அதைப் பூர்த்தி செய்யும் முறைகளும் மாறுபட்டுள்ளன. உதாரணத்திற்கு கணவன், மனைவி, இரு பிள்ளைகள் ஒரு பெண் ஆகியோரைக் கொண்ட ஓர் சாதாரணகுடும்பத்தை எடுத்துக்கொள்வோம் இக்குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகள் என்ன? கல்விச்செலவு உட்பட அன்றாடச் செலவுக்கு ஈடுகட்டும் வருமானம் தேவைப்படுகிறது. இதற்கும் தேவைப்படும் வருமானம் ஏறக்குறைய எல்லா மாதங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும். மாதந்தோறும் இச்செலவுகள் இருந்துகொண்டே இருக்கும். பிள்ளைகள் வளர்ந்து வருமானம் ஏற்படும்போது குடும்பத்தின் தேவைகள் குறையும். தங்களுடைய எஞ்சிய வாழ்க்கைக் காலத்திற்கு கணவனுக்கும், மனைவிக்கும் சிறிய வருமானம் மட்டுமே தேவைப்படும்.

ஆனால் வழக்கமாக வருமானம் ஈட்டுவோர் தன்னுடைய குடும்பத்தின் இன்றியமையாத் தேவைகள் மட்டும் பூர்த்தி செய்துவாழ்ந்துவிட்டால் மட்டும் போதும் என எண்ணுவதில்லை. அவருக்கும் ஆசைகள் உண்டு. அபிலாபஷைகள் உண்டு. இவ்வாசைகள் பூர்த்திசெய்யத் தேவைப்படும். தொகை வருமானம் ஈட்டுவோரின் அந்தஸ்தைப் பொறுத்தது இப்படிப் பார்க்கும்போது இரண்டில் ஒன்று தான் எப்படியும் நிகழக்கூடும். (1) தேவைகளைப் பூர்த்தி செய்ய குடும்பத்திற்குத் தேவையான நிதியுள்ள நிலைமை. (2) நிதியே இல்லாத ஒரு நிலைமை.

முதல் நிலைமையைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏனென்றால் தேவைகள் ஏற்படும்போது அவைகள் பூர்த்தி செய்யப்படும்.

இரண்டாவது நிலைமையில் தேவை ஏற்படும்போது அதைப் பூர்த்தி செய்வதற்கு பணம் கடனாக வாங்கிக் கொள்ளலாம், ஆனால் கடனைப் பிறகு திருப்பிக் கொடுக்க வேண்டும் சில சமயங்களில் பெருந்தொகை கொண்ட தவணைகளாகவும் திருப்பித் தரவேண்டி இருக்கும்.

முதல் நிலைமையில் குறிப்பிட்ட நிதி சேர்ப்பதற்கு மாறாகத் திருப்பித்தரும் தவணைகள் பெரிய தொகைகள் கொண்டதாக இருக்கும். எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவைகள் ஏற்படும்போது கடன் வாங்கித் தேவைகளைப பூர்த்திசெய்வது நல்லதா? அல்லது தேவைகளை எதிர்பார்த்து அதற்கென சிறுசிறு தவணைகளில் சேமிப்பு நிதி சேர்ப்பது நல்லதா? என்பதில் பிந்தியது தான் சிறந்தது என்பதுபற்றி யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்காது. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இரண்டு முறைகளிலும் வருமானம் ஈட்டுவோரின் வருமானம் தான் நிலைமையைச் சமாளிக்கவேண்டும்.

மேற்சொன்னவை அனைத்தும் வருமானம் ஈட்டுவோர் இருந்தால்தான் நடக்கும். வருமானம் தேடித்தருவோர் இல்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். என்ன நடைபெறும்? தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற நிலைமையா மாறிவிடும்? மாறாக நீடித்தபடிதான் இருக்கும். அசம்பாவிதமான எதுவும் நடைபெறவில்லை என்றே வைத்துக்கொள்வோம். தன் உழைப்பினால் சம்பாதிக்கிறார். தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்

இதுகாலத்தின் அனுபதி பெற்றது. ஆனால் அப்படி ஈட்டுகிற வருமானம் அவருடைய 55 அல்லது 60 வது வயதில் நின்றுவிடத்தான் போகிறது. இதனால் ஒரு நிலைமை ஏற்படும் என்பது மட்டும் தெரிகிறது. அவருடைய வருமானம் நின்றுவிடும் ஒரு காலம் வரும் அல்லது வருமானம் கணிசமான அளவிற்குக் குறையுங்காலம் வரும் அப்போது வயது முதிர்ச்சியடைந்த கணவன், மனைவி என்ற இரண்டு வயோதிபர்களையும் யார் காப்பாற்றுவது? உணவு, உடை, இருப்பிடம் ஆகிய இன்றியமையாத் தேவைகளைப் பூர்த்தி செய்யவாவது வருமானம் அவர்களுக்கு வேண்டும். அந்த வருமானத்தைப்பெறுவதற்கானும் வழிகள் தான் உண்டு:

1 வருமானம் ஈட்டியவரின் சேமிப்பு ஏதாவது இருந்தால்;

2 பிள்ளைகள் உதவி செய்ய முடிந்தால்;

3 உறவினர்களும், நண்பர்களும் உதவிசெய்யவிரும்பினால்;

4 முடியுமானால் வயோதிபர்களே வேலைசெய்தால்;

இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுமென்று முன்னரே வருமானம் ஈட்டுவோர் உணர்வாரேயானால், வருமானம் கிடைக்கும் போதே ஒரு பகுதியை ஏதாவது சேமிப்புத்திட்டங்களில் ஒதுக்கி, அந்த முதலீடு மூலம் தன் மனைவிக்கும் தனக்கும் வயோதிபக் காலத்தில் வருமானம் கிடைக்க வழி செய்து கொண்டிருப்பார்.

பிள்ளைகள் தங்களுடைய வயோதிகத் தாய், தந்தையர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்ற இருதய பூர்வமான எண்ணங்களிருந்தாலும், தங்களுக்கென குடும்பங்கள் ஏற்பட்ட பிறகு முடியாமற்போகலாம். சிலர் மட்டுமே தங்களுக்கு உதவி செய்யக்கூடிய நண்பர்களையும் உறவினர்களையும் பெற்றிருக்கிறார்கள். நண்பர்களும், உறவினர்களும் உதவி செய்யத் தயாராய் இருப்பது வெகு சிலருக்கே உண்டு

வயோதிப மனிதர் தானே உழைத்து சம்பாதிக்கமுடியுமானால், தன் மானத்தைக் காப்பாற்ற நிச்சயமாக உழைக்க முற்படுவார் ஆனால் வயோதிபக் காலத்தில் வேலைக்குச் செல்ல யாருக்குத்தான் மனம் இருக்கும்? வயோதிபர்களை யார் வேலைக்கமர்த்திக்கொள்வார்கள்? வருமானம் இல்லாத வயோதிபரின் நிலைமையை விபரிப்பதைவிட ஒரு கண நேரம் கற்பனை செய்து பார்த்தால் போதும். எப்படி அவை நடைபெறுகிறது என்பதல்ல முக்கியம். அவைகள் நடந்தே தீரும் என்பது மட்டும் உறுதி. நாம் அன்றாடம் காணும் உண்மை.

## வாழ்வுக்கும் சாவுக்கும் பணம்

வாழ்வதற்கு வருமானம் தேவைப்படுவது போல் இறப்பதற்கும்பணம் செலவாகிறது. சிறிதுகாலமாவது நோய்வாய்ப்படாமல் மரணம் நிகழுவது இல்லை. நோயைக் குணப்படுத்துவதற்குக் கணிசமான பணம் தேவைப்படுகிறது செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகள் கட்டத்தவறிய தவணைகள், வரிகள் வேறு இருக்கலாம், இவைகளெல்லாம் கட்டியாகவேண்டும். இதற்கும் பணம் தேவைப்படுகிறது.

இறந்துவிட்டவரின் குடும்பத்தார் எவ்வளவு விரும்பினாலும் உடனடிய கச்செலவினங்களைக்குறைக்கமுடியாது மாறுபட்ட சூழ்நிலைக்குத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள சிறிது காலமாவது தேவைப்படும் ஒன்றல்லது இரண்டு ஆண்டுகளாவது பிடிக்கும். இந்தக்காலத்திற்குத் தேவையான வருமானம் இருந்தால், செலவினங்களைச் சர்க்கட்டுவது அவ்வளவு சிரமமாக இருக்காது.

இந்த உதாரணம் ஒரு சாதாரண குடும்பத்தில் எழக்கூடிய நிகழ்ச்சிகளும் சம்பவங்களுமாகும். ஒரு சரியான சேமிப்புத் திட்டத்தின் மூலம் இப்பிரச்னைகளுக்குப் பரிகாரம் காணலாம்.

தவணைகளின் மூலம் சேமிப்பு நிதி ஏற்படுத்த குறைந்தது இரண்டு நிபந்தனைகள் உண்டு.

1. மொத்தத் தவணைகளும் செலுத்தியாக வேண்டும்.

2. தவணைகள் சரிவர முறையாகச் செலுத்த வேண்டும்.

இந்த இரு நிபந்தனைகளில் எந்த நிபந்தனை நிறைவேறப்படாவிட்டாலும் திட்டம் வெற்றிபெற முடியாது. மாறாக முறிந்துவிடும் இரண்டாவது நிபந்தனையாவது நிறைவேற்றிவிடலாம் ஆனால் முதல் நிபந்தனை நிறைவேற தொடர்ச்சியான நீடித்த வருமானம் தேவை அதாவது சம்பாதிப்பவர் தொடர்ந்து வாழ வேண்டும் ஏதாவது வருமானம் பெற வேண்டும் முறையாகச் சேமிக்க வேண்டும். சேமித்த தொகையைத் தவணைகளாகத் தவறாமல் செலுத்த வேண்டும். சேமித்த தொகையைத் தற்காலிக ஆசையைப் பூர்த்தி செய்யச்

[5-ம்பக்கம் பார்க்க]

## திருவெம்பாவை பூஜைக்கு

**தேவையான**

- விளக்கு கூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம் (உடன் யந்திரத்தினால் அரைக்கப்பட்டது)
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனைதிகள்; பன்னீர்; அத்தர்
- கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள் (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த 42 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

### எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை, வியாபாரிகளும்)

191, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence 7068 கொழும்பு: 33825

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
காத்திருப்பேன் உனக்காக

**நாகபூஸ்**
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி ப. 2-30
எம். ஜி ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

**ராணி**
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2.30, 6·00, 9.30.
எம். ஜி. ஆர் -விஜயா, நாகேஷ் நடித்த
**விவசாயி**
(புதிய பிரதி)

11-வது ஜனத்திரள் வாரம்!
**ராஜா**
யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 5-15, 9-45
ஜெமினி, விஜயகுமாரி, கே. ஆர். விஜயா நடித்த
**தசாவதாரம்**
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவு செய்து கொள்ளவும்.
தந்தை செல்வாவின் இறுதியாத்திரை வெகு விரைவில் இப்படத்துடன் காண்பிக்கப்படும்.

**Regal** (Jaffna)
"KRAKATOA" IS A STUNNER!
A Grand Adventure spectacle designed to knock you out.
It is Sensational. An artistic and technical triumph.
Adults may find themselves biting their nails.
Now running to packed houses in its
3nd Week 70 M. M.
"Krakatoa East of Java"
Cinerama wide screen! [Techni color]
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Sat, Sundays 4-15 7-00 P. m.

**சாந்தி**
(யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி – சாவித்திரி (இருவேடங்களில்)
ரங்கராவ், M R ராதா
**காத்திருந்த கண்கள்**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் – ஜெயசுதா நடித்த
(இருவேடம்)
**பந்தாட்டம்** (புதிய பிரதி)

**மனோஹரா**
(யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்**
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ் விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய் விஜயா
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

**வெலிங்டன்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
**முத்தான முத்தல்லவோ**

**லிடோ** எம். ஜி. ஆர். லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
போன்; 7693
(யாழ்.நகர்)
**நீதிக்கு தலைவணங்கு**


சகல வர்த்தகர்களும்

# ஒரேவிதமாகக் கவனிக்கப்படுவர்; பிரதேச பாகுபாடு காட்டமாட்டோம்

## யாழ்ப்பாணத்தில் வர்த்தக மந்திரி உறுதி

(யாழ்ப்பாணம்)

"வடபகுதி வர்த்தகர்களுக்கும், தென்பகுதி வர்த்தகர்களுக்குமிடையில், எவ்வித அரசியல் பாகுபாடும் காட்டப்படமாட்டாது சகலவர்த்தகர்களும் ஒரே விதமாகத்தான் கவனிக்கப்படுவார்கள்"

யாழ் அரசாங்க செயலக மண்டபத்தில் நடந்த மாவட்ட விவசாய கமிட்டிக்கூட்டத்தில் பேசிய, வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டத்தில் உதவி அமைச்சர் திரு குமரசிறி, விற்பனை இலாகா கமிஷனர் திரு. மகாதேவா, அரசாங்க அதிபர் திரு டபிள்யூ ஏ எல். விஜயபால, கூட்டணி எம் பி க்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் இலாகாத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

### யாழ் விவசாயிகள் முதலிடம்

அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது:

"விவசாயத்துறையில் யாழ்ப்பாண விவசாயிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள் என்பதை நானறிவேன். இந்த அரசு விவசாயிகளின் முன்னேற்றத்திற்குத் தேவையான சகல உதவிகளையும செய்து கொடுக்கும

யாழ்ப்பாணத்தில் சிறந்த முறையில் இயங்கிவரும் கூட்டுறவு இயக்கம், மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக புனரமைப்புச்செய்யப்படவிருக்கிறது

பாவனையாளர்களை மட்டுமன்றி வர்த்தகர்களுக்கும் பயனளிக்கக்கூடிய விதத்தில் பாவனையாளர் சங்கங்கள் அமைக்கப்படவிருக்கிறது.

### கிருமிநாசினி இறக்குமதி

விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய கிருமிநாசினியைப் போதியளவு இறக்குமதி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எண்ணை விலை அதிகரித்ததைத் தொடர்ந்து உலகச் சந்தையில் கிருமிநாசினியின் உற்பத்திச் செலவும் அதிகரிக்கக்கூடும்.

வர்த்தகர்கள் சங்கம், பொருட்களுக்கு விலையை நிர்ணயிக்கும்போது மக்களைப் பாதிக்காத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.

### நல்லூர் எம். பி. கோரிக்கை

திருநெல்வேலி பாடசாலைக் கருகிலுள்ள ஒரு ஏக்கர் நிலத்தை விவசாயத்திற்குப் பாவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம கொண்டுவந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளபபட்டது. திருநெல்வேலி விவசாயப் பாடசாலையை மேலும அபிவிருத்தி செய்யவேண்டும்என்று நல்லூர் எம் பி. விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பழங்களை டப்பாக்களில் அடைத்து பதனிடும் தொழிற்சாலையொன்றை வடக்கில் நிறுவவேண்டுமெனப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம்கேட்டுக்கொண்டார்.

இதற்குப்பதிலளித்த அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ஒவ்வொரு பழங்களும் கொஞ்சக் காலத்துக்குத்தான் கிடைக்கக்கூடியதாக இருப்பதாகவும, எல்லாக்காலங்களும் கிடைக்கக்கூடிய பழங்கள் பற்றி அறிந்தபின் இதுபற்றி ஆலோசிப்பேன் என்ருர்.

கிளிநொச்சியில் விவசாய காலங்களில் டீசலுக்கும் மண்ணெண்ணைக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும், இதற்கு புகையிரத வாகன்கள் போதாமலிருப்பதாகவும் பருத்தித்துறை எம் பி திரு. கே. துரைரத்தினம் கூறினர்.

காங்கேசன்துறையில் முருகைக்கல் தோண்டி எடுக்கப்பட்ட பள்ளங்களில் பெரிய எண்ணை தாங்கியைத் தாட்டு கப்பல் மூலம் டீசல், மண்ணெண்ணையை வருவித்து வடபகுதிக்கு விநியோகிக்கலாம் என்றும் ஆலோசனை கூறினர், இவ்விஷயம் பற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறினர்,

ஊர்காவற்றுறை எம், பி, பண்டிதர் க, பொ, இரத்தினம், விவசாயக் கடன் பெறுவதில் மக்கள் பெரும் கஷ்டபபடுவதாகவும் சில கிராம சேவகர்கள் சிபார்சு செய்ய மறுத்து வருகிருர்களென்றும் கூறிய போது கிளிநொச்சி எம பி, திரு, வி. ஆனந்தசங்கரி அதனை ஆமோதித்து கிளிநொச்சியிலும இந்தநிலை இருப்பதாகவும கூறினர்.

முதலைமார்க் மண்வெட்டி வாங்க முடியாமல் விவசாயிகள் கஷ்டபபடுவதாக உதவி அரசாங்க அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்குப பதிலளித்த அமைச்சர்திரு லலித் அத்துலத்முதலி, மண்வெட்டியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யலாம் என்றும் ஆனல் இறக்குமதி வரியைக் குறைக்க ஏலாது என்றும் கூறினர்.

அரச உருக்குக் கூட்டுத்தாபனமே இங்கு மண்வெட்டிகளை உற்பத்தி செய்வதாக

(6- பக்கம் பார்க்க)

### ஆயுட்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

செலவழித்துவிடலாம் என்ற அவா எழுந்தால் அதை எதிர்த்து திடமனதுடன் இருந்து தவணைகளைச் சரிவரச்செலுத்த வேண்டும். முதல் நிபந்தனையை நிறைவேற்றுவதற்கு இத்தனையும் நடந்தாக வேண்டும்.

இவ்வளவு சிக்கல்களும், குறைபாடுகளும் இல்லாத ஒரு சேமிப்புத்திட்டம், எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு சீரிய ஏறபாடு என்னவென்பதை மனிதன கண்டறிய முற்பட்டான். பல்வேறு முறைகள் கையாளப்பட்டன. தவறு காண்பது தவறைப் பிறகு திருத்திக் கொள்வது என்ற நிலைக்குப் பிறகு இப்போது நாம்காணும் ஆயுட்காப்புறுதித் திட்டங்கள் உருவாக்கின இயல்பாகவே ஆயுட்காப்புறுதியும் ஒரு சேமிப்புத் திட்டமே. ஆனல் மற்றைய திட்டங்களில் நாம் கண்ட குறைபாடுகள் இல்லாத சேமிப்புத்திட்டம் ஆயுட்காப்புறுதியாகும்


**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30pm
The Count of Monte Cristo

**RIO** Daily 4 Shows
(Jaffna)
PRASURA OF THE AZATICS


வன்செயலால் பாதிக்கப்பட்ட தமிழர்

# புனர்வாழ்வுக்கழக மூலம் தகவல் கொடுக்க கோரிக்கை

[கொழும்பு]

சன்சோனி விசாரணைக் குழுவிற்கு பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அனைவரும் தெரிவிக்கவிருக்கும் தகவல்களைத் திரட்டிக் கொடுக்க தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் குழுவொன்றை நியமித்துள்ளது. இக்குழுவில் சிரேஷ்ட வழக்கறிஞர்களும் ராணி வழக்கறிஞர்களும் இடம்பெற்றுள்ளனர்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேறகண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் அனைவரும் தாங்கள் சன்சோனி விசாரணைக் குழுவிற்குக் கொடுக்கும் தகவல்களை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் மூலமாகக் கொடுக்க வேண்டும் என விரும்புகிஞேம். பல நன்மைகளுக்கு இடமுண்டு. எமக்கு தாங்கள் அனுப்புகின்ற விபரங்கள் யாவறறையும் சிறப்பாகத் திரட்டி கோவைப்படுத்தி எழுத்து மூலமாக விசாரணைக்குழுவிற்கு சமர்ப்பித்து அவர்களின் முன்னல் இவ்விபரங்களை சாட்சியங்கள்மூலம் எடுத்துரைத்து விளங்கப்படுத்த குழு ஒன்றை நியமித்துள்ளோம. இக்குழு கொழும்பு 3, காலி வீதி, 676-ம் இலக்கத்திலுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்க பணிமனையிலிருந்து செயறபடும்.

சன்சோனி விசாரணைக் குழுவிற்கு 78 ஜனவரி 2ந் திகதிக்கு முன் விபரங்களை எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்." (அ)

யாழ். இளைஞர்களுக்கான

# குடும்பத்திட்டச் சங்க கருத்தரங்கு ஆரம்பம்

(திருநெல்வேலி)

இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தின் இளைஞர் குடிசன வியல் குழுவின் ஆதரவில் யாழ் இளைஞர்களுக்கான மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு நேற்று பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பமாகியது.

யாழ் அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ ஏ எல் விஜயபால நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

இன்று திங்கட்கிழமை யாழ். வித்திய திபதி திரு தி மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கலாநிதி அ. சண்முகதாஸ், திரு. அ. இரத்தினம உட்பட பலர் கருத்துரை நிகழ்த்துவர்.

நாளை செவ்வாய்க்கிழமை யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திரு கலா பரமேஸ்வரனின் கருத்துரை இடம்பெறும்.

இலங்கை இளைஞர் குடும்பத் திட்ட அதிகாரி திரு என். புஷ்பநாயகம் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளார்.

]உ

### மணிவாக்கு

ஒரு நிர்வாகத்தின் அதிகாரத்துக்கு ஒருவன் அமையும்போது, தற்சுதந்திரத்தை விலைக்குக் கொடுக்கிருனென்பதே அச்சேயவின் கருத்தாகும்

— காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## அமைச்சரின் வருகை!

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று முதல் தடவையாக அமைச்சர் என்ற முறையில் யாழ்ப்பாணம் வந்தார் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இன்றும் உத்தியோக ரீதியான சில நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ளவிருக்கிறார்.

திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவைத் தலைவராகக் கொண்ட ஐக்கியதேசியக் கட்சி சென்ற பொதுத்தேர்தலில் மிகப்பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி பீடத்துக்கு வந்தது இந்த அரசு பதவிக்கு வந்த மிகக் குறுகிய காலத்திலேயே பல பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியேற்பட்டது

என்றாலும் நாட்டின் சகல பிரச்னைகளையும் நியாயமான முறையில் சகலருக்கும் சமத்துவம் என்ற முறையில் தீர்த்து வைப்போம் என்று அரசாங்கம் உறுதியளித்து வருகிறது.

யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை போன்றவற்றை விசாரணை செய்வதற்குப் பாரபட்சமற்ற கமிஷன் நியமிக்க வேண்டுமென்று பலரும் பல இடத்திலும் குரல் எழுப்பியும் முன்னைய அரசு இதற்குச் செவிசாய்க்கவில்லை. இந்த அரசு இதற்கான விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்துள்ளது

தரப்படுத்தல் என்ற பெரும் அநியாயம் முன்னைய அரசினால் ஏற்படுத்தப்பட்டது. இதையும் இந்த அரசு நீக்கியிருக்கிறது.

இந்தக் காரணங்களினால் இதரபிரச்னைகளையும் நியாயமான முறையில் தீர்த்து வைப்போம் என்று அரசு கூறும்போது நம்பிக்கை வைக்கலாம் அல்லது சிறிது அவகாசம் கொடுத்துப் பார்க்கலாம் என்று கருதுவதில் தவறில்லை.

முன்னைய சில அமைச்சர்கள் போலவும் இன்றைய சில அமைச்சர்கள் போலவும் வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி 'பெரும் வாக்குறுதிகளை' இதுவரை கொடுத்ததாகத் தெரியவில்லை.

இளைஞரான திரு. லலித் அத்துலத்முதலி நாட்டின் பொருளாதார விடுதலை காண்பதற்கு சகல மக்களினதும் ஒத்துழைப்பைக் கோருகிறார்.

நாட்டின் பொருளாதார விடுதலை சகல மக்களினதும், சகல பிரதேசங்களினதும் ஒத்துழைப்பில்தான் தங்கியிருக்கின்றது.

வர்த்தக அமைச்சரின் யாழ்ப்பாணவருகை உழைப்பாளிகளான இப்பகுதி மக்களின் ஒத்துழைப்பைக் கோருவதற்கான ஒன்றே யென்று கருதலாம்.

அமைச்சரின் இந்த விஜ

## டெஸ்ட் கிரிக்கெட் சிம்ஸன்—168

சிட்னி, டிச 18

ஆவுஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3 வது நாளான இன்று ஆட்ட இறுதியில் இந்தியா 2-வது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 67 ஓட்டங்களைப் பெற்றது. இந்தியா முதல் இன்னிங்ஸில் மொத்தம் 402 ஓட்டங்களைப் பெற்றது.

ஆவஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் மொத்தம் 394 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் சிம்ஸன் 168 ஓட்டங்களைப் பெற்றார் ஆட்டம் நாளை மீண்டும் ஆரம்பமாகும்.

0 0 0

லாகூரில் பாகிஸ்தானுக்கும் இங்கிலாந்துக் குமிடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 407 ஓட்டங்களையும், இங்கிலாந்து 6 விக்கெட் இழப்புக்கு 245 ஓட்டங்களைம் பெற்றன.

## இலவச படக்காட்சி

[திருநெல்வேலி]

திருநெல்வேலி இந்த வாலிப சங்க மண்டபத்தில் இலங்கை குடும்பக்கிட்டச் சங்கத்தின் ஆதரவில் இன்று மாலை இலவச படக்காட்சி நடைபெறும். [உ[

## ஒரேவிதமாக..

[5ம் பக்கத் தொடர்ச்சி]

வும் அவற்றின் தரத்தை உயர்த்தும் பொருட்டே இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்

அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது:

''உணவுஉற்பத்திக்குபொறுப்பாக காணி அமைச்சே இருக்கிறது. ஆனால் வர்த்தக அமைச்சு மக்களுக்கு உணவு அளிக்கும் பொறுப்பாக, மறைமுகமாக உணவு உற்பத்திக்கு பொறுப்பாகவும் இருக்கிறது. மக்களுக்கு குறைந்த விலையில் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாண விவசாயிகள் கடும உழைப்பாளிகள் என்பதை அறிவேன் அவர்களுக்கு வர்த்தக அமைச்சு தேவையான உதவிகளைச் செய்யும''

உதவி அமைச்சர் திரு அமரசிறி, இந்த அரசு மக்களின் வாழ்வை முன்னேற்ற பல வழிகளில் உதவி செய்யும எனக் கூறினார் (க)

யத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஒரு இயக்கத்தினர் துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தனர்.

இது தொடர்பாக சில சிறு சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. பகிஷ்கரிக்க வேண்டுமென்பதற்குச் சில காரணங்களும் கூறப்பட்டன

அமைச்சர்களுக்குக்கொடி குடை ஆலவட்டம் பிடித்து வரவேற்பளிக்க வேண்டிய அவசியமே இல்லை, அப்படிச் செய்வதும் கூடாது.

ஆனால் நாட்டின் எந்தப் பகுதிக்கும் அவர்கள் நேரில் சென்று நிலைமைகளை அறிய வரும்போது உண்மை நிலைமையை எடுத்துக் காட்ட வேண்டியது மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் கடமையாகும். இந்தக் கடமையைச் செய்யத் தேவையில்லையென்றால் அரசுடன் எந்தவித தொடர்புமில்லாமல் தமது சொந்தக்காலிலேயே நிற்பதற்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும்'

இதற்கு இப்போது யார் தயாராக இருக்கிறார்கள்?

# ஆங்கிலத்தில் நடைபெற்ற விவசாய கமிட்டிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத்முதலி தலைமையில் யாழ்ப்பாணம் அரசாங்க செயலக மண்டபத்தில் நடந்த மாவட்ட விவசாய கமிட்டிக்கூட்டம் முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களில் சிலரும், மற்றும் இலாகா உத்தியோகத்தர்களும், ஆங்கிலத்திலேயே உரையாற்றினர்கள்

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம் எம் பி திரு வெ யோகேஸ்வரன் நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம், கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேற்பிள்ளை, மானிப்பாய் எம் பி திரு வி தர்மலிங்கம், ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம், உடுப்பிட்டி எம் பி திரு த இராலிசங்கம், கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி, வட்டுக்கோட்டை எம் பி திரு ரி திருநாவுக்கரசு ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்களில் யாழ்ப்பாணம் உடுப்பிட்டி, உடுவில், கோப்பாய், வட்டுக்கோட்டை எம் பிக்கள் எதுவுமே பேசாமல், அங்கு நடப்பதை அவதானித்துக்கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட உதவி அரசாங்கஅதிபர்களும் இலாகா உத்தியோகத்தர்களுமே, கூடியநேரத்தை எடுத்துக்கொண்டனர். இவர்கள் பேசியபோது இரைச்சலாக இருந்தது ஒரே நேரத்தில் இரண்டு மூன்றுபேர் எழுந்து பேசிக்கொண்டிருந்தனர். இதனால் மற்றவர்களுக்கு எதுவும் விளங்கி கொள்ளமுடியாமலிருந்தது.

அமைச்சர் லலித் அத்துலத்முதலிக்கு ஒருபக்கத்தில் உதவி அமைச்சர் அமரசிறியும், மறு பக்கத்தில் அரசாங்க அதிபர் திரு டபிள்யு ஏ எல் விஜயபாலாவும் அமர்ந்திருந்தனர்.

## 'அட்டெண்டண்ட்' நியமனம்: அமைச்சரிடம் புகார்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் சிற்றூழியர்களாக இருந்து 'அட்டெண்டண்ட்' ஆக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அனுராதபுரம், புத்தளம், கொழும்பு மட்டக்களப்பு யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் நியமனங்கள் சுகாதார திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இதில் அனுராதபுரம், புத்தளம், கொழும்பு ஆகியமாவட்டங்களுக்கு நியமனம் பெற்றவர்கள் சமீபத்திய கலவரங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தாங்கள் பாதுகாப்புடன் கடமையாற்றமுடியாது என்றும், தமக்கு தமிழ்ப்பிரதேசங்களில் மாத்திரம் நியமனம் வழங்குமாறும்சுகாதார அமைச்சரை வேண்டியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் 'அட்டெண்டண்ட்' பதவிகளுக்கான காலி இடங்கள் இருக்கும்போதுபிறமாவட்டங்களில் தமக்கு நியமனம் வழங்கப்பட்டிருப்பதையும் ஆட்சேபித்துள்ளனர்

இது பற்றி யாழ்ப்பாணம் எம் பி திரு வெ யோகேஸ்வரனிடமும் முறையிடப்பட்டுள்ளது

புதிதாக நியமனம் பெற்ற இந்த 'அட்டெண்டண்ட்'களில் பெண்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ

## பொறுத்திருந்து-

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்.

திரு. அ அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

எல்லோரும் இதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப்பொறுத்திருக்க வேண்டும் அமைச்சரவையில், முக்கிய இடம் வகிக்கும் வர்த்தக அமைச்சர், இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பங்கைச் செலுத்த வேண்டும்.

'வர்த்தகத் துறையில் நல்லெண்ணம் அவசியம் அந்த நல்லெண்ணம் செயல்படாவிடில் பயனெதுவுமில்லை. நல்லெண்ணத்தை செயலில் காண்பதற்கு மக்கள் காத்திருக்கிறார்கள். இளைஞர்களின் மனப்பான்மையை மாற்றி நாங்கள் இங்கு வருகை தந்திருக்கிறோம்.

## அமைச்சருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைபவத்தில் கலந்து கொள்ளாததைக் காட்டக் கொண்டு தொடர்ந்தும் பகிஷ்கரிப்பு முயற்சியில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

திரு. யோகேஸ்வரனை இன்றைய திறப்புவிழாவில் கலந்துகொள்ளாமல் செய்வதற்கு சில சக்திகள் முயற்சி செய்வதாகவும் ஆனால் அதற்கு அவர் எந்தவகையிலும் இடம் கொடுக்க முடியாதென்று அறிவித்துவிட்டதாகவும் இதற்கு தமிழ் இளைஞர் பேரவையும் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### நாரந்தனை சி. நா. குணரத்தினம்

நாரந்தனை வடக்கு சி. நா. குணரத்தினம் காலமானார். இவர் கமலாட்சியின் கணவரும் சிவயோகமலர், செல்வமலர், கயிலைநாதன், தவமலர், சோதிமலர், மல்லிகா, தேவிகா, கமலநாதன் ஆகியோரின் தந்தையும் த உலகநாதபிள்ளை [கொழும்பு மாநகரசபை], சி. சதாசிவம் [கொழும்பு வர்த்தகர்], ச. சபாரத்தினம் [உரிமையாளர் நியூ அம்பாள் கபே, மாங்குளம்], க. யோகநாதன் [சில்வா ஸ்டோர்ஸ் வெனியா] ஆகியோரின் மாமனும் ஆவர். அன்னாரின் பூதவுடல் இன்று [19-12 77] திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். தகவல்: சு. சபாரத்தினம், உதவி ஆசிரியர், 'ஈழநாடு.'

7960

## மரண அறிவித்தல்

### ராமன்பிள்ளை கோவிந்தபிள்ளை

கபே பாரத் உரிமையாளர் திரு. ராமன்பிள்ளை கோவிந்தபிள்ளை அவர்கள் காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கேரளாவைச் சேர்ந்த தேவகி அம்மாளின் அன்புச் சகோதரரும், யோகநாத் (மூசாஜீஸ்), ரகுநாத் (நியூபாரத்-பேக்ஹவுஸ்), ஜெனநாத் (பரிஸ்), புஸ்பநாத், ஜோதிநாத் (இங்கிலாந்து), கானவதி, கோபிநாத், கீதவதி, சந்திரநாத், குணவதி ஆகியோரின் அன்புத்தந்தையும், சந்திரகுமாரியின் அன்பு மாமனும், ரகுராஜ், ரெமிலதா, சௌதா ஆகியோரின் அப்பப்பாவும், பஞ்சலிங்கத்தின் (C. T. B.) மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 86/1, ஸ்ரான்லி வீதி இல்லத்திலிருந்து தகனக்கிரியைகட்காக (19-12-77) இன்று திங்கடகிழமை மாலை 4 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

7958

## மரண அறிவித்தல்

### சு சதாசிவம்செட்டியார்

சு சதாசிவம்செட்டியார் காலமானார் இவர் கமலாம்பிகையின அருமைக்கணவரும், முருகானந்தன் (வைஸ்-வே) குணநிதி, பத்மநாதன் (இராமையாசெட்டியார் அன்சன்ஸ்) பகீரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (கிறீஸ்) முருகானந்தம் (சிறி முருகன் மில்ஸ் பேலியகொடை) ஆகியோரின்மாமனும் ஆவர். அன்னாரின் பூதவுடல் பெரியகடை 24/1 இலக்க இல்லத்திலிருந்து இன்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

7962

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி தங்கம்மா

பெரியவிழான் திருமதி கந்தசாமி தங்கம்மா காலமானார். இவர் காலம்சென்ற பொலிஸ் சார்ஜண்ட் கந்தசாமியின் அன்பு மனைவியும். இளைப்பாறிய சுங்க உத்தியோகத்தர் கந்தசாமி மாணிக்கவாசகரின் அன்புத் தாயாரும், யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நா. சேனாதிராசாவின் சிறிய தாயாரும் கனகம்மாவின் அன்பு மாமியாரும் விமலராணி சபாபதிப்பிள்ளை, திருவாசகரின் பேர்த்தியும், தூரிக்காவின் பூட்டியாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 10 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக யாழ். மணிக்கூட்டு வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

7961

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.